சிறப்பு அலங்காரத்தில்...

வால்பாறை சுப்பிரமணிய சுவாமி கோயிலில் நடைபெற்று வரும் மாசிமகத் திருவிழாவையொட்டி ஞாயிற்றுக்கிழமை சிவப்பு நிற மலர்களால் அலங்கரிக்கப்பட்டு வள்ளி தெய்வானையுடன் பக்தர்களுக்கு காட்சியளிக்கும் சுப்பிரமணிய சுவாமி.

காரமடை அரங்கநாதர் கோயிலில் திருக்கல்யாணம்

மேட்டுப்பாளையம், மார்ச் 1: மேட்டுப்பாளையம் அருகேயுள்ள காரமடை அரங்கநாதர் சுவாமி கோயிலில் மாசி மகத் தேர்த் திருவிழாவையொட்டி, ஸ்ரீதேவி, பூதேவியுடன் அரங்கநாத பெருமாளுக்கு திருக்கல்யாண உற்சவம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

கோவை மாவட்டத்தில் பிரசித்தி பெற்ற வைணவ தலங்களில் காரமடை அரங்கநாதர் கோயில் சிறப்பு வாய்ந்தது. இக்கோயிலில் புரட்டாசி, மார்கழி உற்சவம், மாசி மகத் தேர்த் திருவிழா வெகு விமரிசையாக நடைபெறுவது வழக்கம்.

அதன்படி, நடப்பு ஆண்டுக்கான தேர்த் திருவிழா கடந்த 23-ஆம் தேதி தொடங்கியது. 24-ஆம் தேதி காலை கொடியேற்றம், அன்றிரவு அன்ன வாகன உற்சவம், சிம்ம வாகன உற்சவம், அனுமந்த வாகன உற்சவம், கருட சேவை ஆகியவை நடைபெற்றன.

இந்நிலையில், சுவாமி திருக்கல்யாண உற்சவம் சனிக்கிழமை காலை 5.30 மணியளவில் நடைபெற்றது. இதில், மஞ்சள் இடித்து, திருமாங்கல்ய மாலையுடன் பக்தர்கள் முன்னிலையில் நடனமாடி மாலை மாற்றி திருக்கல்யாண உற்சவம் நடைபெற்றது. மேட்டுப்பாளையம், காரமடை, சிறுமுகை மற்றும் கோவை சுற்றுவட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த ஏராளமான பக்தர்கள் பங்கேற்று சுவாமி தரிசனம் செய்தனர்.

திருமண கோலத்தில் ஸ்ரீதேவி, பூதேவியுடன் பக்தர்களுக்கு அருள்பாலித்த அரங்கநாத பெருமாள்.

இரவு 8.30 மணியளவில் யானை வாகன உற்சவம் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில், முன்னாள் அறங்காவலர் குழுத் தலைவர் எம்.கே.கே.வி. தேவ் ஆனந்த, முன்னாள் அறங்காவலர் எம்.எம்.ராமசாமி, காரமடை தாசபளஞ்சிக மகா ஜன சங்கத் தலைவர் கே.பி. வி.கோவிந்தன், காரமடை நகர்மன்றத் தலைவர் உஷா வெங்கடேஷ் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

இந்நிலையில், முக்கிய நிகழ்வான தேரோட்டம் திங்கள்கிழமை (மார்ச் 2) நடைபெறுகிறது. முன்னதாக, காலை 5.30 மணிக்கு ஸ்ரீதேவி, பூதேவி சமேத அரங்கநாதபெருமாள் திருத்தேருக்கு எழுந்தருளுகிறார். இதைத் தொடர்ந்து, மாலை 4 மணியளவில் தேரோட்டம் நடைபெறவுள்ளது.

மார்ச் 3-ஆம் தேதி பரிவேட்டை, குதிரை வாகன உற்சவம், 4-ஆம் தேதி தெப்போற்சவம் மற்றும் சேஷ வாகன உற்சவம், 5-ஆம் தேதி சந்தான சேவை, 6-ஆம் தேதிகாலை 9 மணிக்கு வசந்த நிகழ்ச்சி ஆகியவை நடைபெறவுள்ளன.

விழாவுக்கான ஏற்பாடுகளை கோயில் நிர்வாக அதிகாரிகள் செய்து வருகின்றனர்.

தேர்த் திருவிழாவையொட்டி போக்குவரத்து மாற்றம்

மேட்டுப்பாளையம், மார்ச் 1: மேட்டுப்பாளையம் அருகே காரமடை அரங்கநாதர் சுவாமி கோயில் தேரோட்டத்தையொட்டி, போக்குவரத்து மாற்றம் செய்து போலீஸார் அறிவித்துள்ளனர்.

கோவை மாவட்டத்தில் மிகவும் பிரசித்தி பெற்ற வைணவ திருத்தலங்களில் காரமடை அரங்கநாதர் கோயில் உள்ளது. இந்தக் கோயிலில் இந்த ஆண்டு மாசி மகத் தேர்த் திருவிழா கடந்த 24-ஆம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. விழாவின் முக்கிய நிகழ்வான திருத்தேர் வடம் பிடித்தல் திங்கள்கிழமை மாலை 4 மணிக்கு வெகுவிமரிசையாக நடைபெற உள்ளது. தேரோட்டத்தில் கோவை, திருப்பூர், நீலகிரி, ஈரோடு உள்ளிட்ட தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் லட்சக்கணக்கானோர் கலந்து கொள்வார்கள் என்பதால் காவல் துறை மற்றும் கோயில் நிர்வாகம் சார்பில் அறிவுறுத்தல்கள் மற்றும் போக்குவரத்து மாற்றம் செய்து அறிவிக்கப்பட்டுள்ளது.

இதைத் தொடர்ந்து, மார்ச் 2, 3 ஆகிய தேதிகளில் காரமடை அரங்கநாதர் கோயில் தேர்த் திருவிழாவையொட்டி, கோவை- மேட்டுப்பாளையம் சாலையில் போக்குவரத்து மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அதன்படி, மேட்டுப்பாளையத்தில் இருந்து கோவை செல்லும் வாகனங்கள் மேட்டுப்பாளையம்- அன்னூர் சாலையில், தென் திருப்பதி நால் ரோடு, பெள்ளாதி, கண்ணார்பாளையம், கோட்டை பிரிவு, பெரிய நாயக்கன்பாளையம் வழியாக செல்லலாம், கனரக வாகனங்கள் ஒன்னிபாளையம், கோவில்பாளையம் வழியாக கோவை செல்லலாம்.

கோவையில் இருந்து மேட்டுப்பாளையம் மற்றும் உதகை செல்லும் வாகனங்கள் பெரியநாயக்கன்பாளையம், பெட்டதாபுரம், ஏழு சுழி, திம்மம்பாளையம், காரமடை, புதிய ரயில்வே மேம்பாலம் வழியாக மேட்டுப்பாளையம், உதகை செல்லலாம். மேலும் கோயிலுக்கு வருகை தரும் பக்தர்கள் தங்கள் வாகனங்களை நிறுத்தி கொள்வதற்கு ஆங்காங்கே வரும் வழியிலேயே வாகன நிறுத்துமிடம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதைத் தவிர்த்து வேறு இடங்களில் அனுமதியின்றி நிறுத்தும் வாகனங்கள் மீது அபராதம் விதிக்கப்படும்.

திருட்டு நடவடிக்கைகளை தவிர்ப்பதற்காக கோயிலுக்கு நன்கொடை செலுத்த விரும்பும் பக்தர்கள் திருக்கோயில் மூலமாக கியூஆர் கோடு மூலம் பணம் செலுத்தும் வசதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பக்தர்கள் கையில் ரொக்கமாக பணத்தை கொண்டு வருவதை தவிர்க்குமாறு காவல் துறை தரப்பில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

சந்திர கிரகண நிகழ்வை அறிவியல் விழாவாகக் கொண்டாட அழைப்பு

கோவை, மார்ச் 1: சந்திர கிரகண நிகழ்வை அறிவியல் விழாவாக கொண்டாட தமிழ்நாடு அறிவியல் இயக்கம் அழைப்பு விடுத்துள்ளது.

இதுகுறித்து தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் கோவை மாவட்டத் தலைவர் இரா.பிரபாகரன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

தமிழ்நாடு அறிவியல் இயக்கம், இந்துஸ்தான் கலை அறிவியல் கல்லூரி சார்பில் வரும் செவ்வாய்க்கிழமை மாலை 4.30 மணி அளவில் சந்திர கிரகண நிகழ்வு அறிவியல் விழாவாக கல்லூரி வளாகத்தில் கொண்டாடப்படவுள்ளது.

இந்த நிகழ்வின் முக்கிய நோக்கம் மக்களிடம் உள்ள அச்சத்தையும், சந்திர கிரகணத்துடன் தொடர்புடைய தவறான நம்பிக்கைகளையும் அகற்றுவதாகும். இதற்காக சந்திர கிரகணத்துக்கான அறிவியல் சொற்பொழிவு, சிறு விழிப்புணர்வு தேர்வு, கிரகணம் தொடர்பான அறிவை பரிசோதிக்கும் தேர்வு, தவறான நம்பிக்கைகளை மாற்றும் நிகழ்வுகளும் நடைபெறுகின்றன.

இதன்படி, 100 பேர் சேர்ந்து வடை சாப்பிடும் நிகழ்வு, 100 பேர் சேர்ந்து தேநீர் அருந்தும் நிகழ்வு, 100 பேர் சேர்ந்து நீர் அருந்தும் நிகழ்வும், தொலைநோக்கி மூலம் வான் நோக்கும் கண்காணிக்கும் நிகழ்வும் நடைபெறுகின்றன.

இந்த நிகழ்வில் அனைவரும் பங்கேற்று கோள் விளையாட்டைக் கொண்டாடி அறிவியல் விழாவாக மாற்றுவோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்திர கிரகணம்

கோயில் சந்நிதி நாளை 3 மணி நேரம் அடைப்பு

மேட்டுப்பாளையம், மார்ச் 1: சந்திர கிரகணம் நடைபெற உள்ளதையொட்டி, காரமடை அரங்கநாதர் கோயிலில் செவ்வாய்க்கிழமை (மார்ச் 3) மாலை 5 மணி முதல் இரவு 8 வரை 3 மணி நேரம் நடை அடைக்கப்படும் என கோயில் நிர்வாகம் சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து கோயில் நிர்வாகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

சந்திர கிரகணத்தையொட்டி, செவ்வாய்க்கிழமை (3ஆம் தேதி) மாலை 5 மணிக்கு கோயில் சந்நிதி நடைகள் அடைக்கப்பட்டு இரவு 8 மணிக்கு நடை திறக்கப்பட உள்ளது. தொடர்ந்து இரவு 9.30 மணிக்கு மேல் பக்தர்கள், சுவாமி தரிசனத்துக்கு அனுமதிக்கப்படுவார்கள். மேலும் கிரகண காலத்தில் ராஜகோபுர நடை திறந்திருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிளஸ் 2 பொதுத் தேர்வு இன்று தொடக்கம்

36,564 மாணவர்கள் எழுதுகின்றனர்

கோவை, மார்ச் 1: கோவை மாவட்டத்தில் திங்கள்கிழமை தொடங்கும் பிளஸ் 2 பொதுத் தேர்வை 36,564 மாணவ, மாணவிகள் எழுதுகின்றனர்.

தமிழகம் முழுவதும் பிளஸ் 2 பொதுத் தேர்வு திங்கள்கிழமை தொடங்கி மார்ச் 26-ஆம் தேதி வரை நடைபெறுகிறது. இந்தத் தேர்வுகள் அனைத்தும் காலை 10 மணி முதல் பிற்பகல் 1.15 மணி வரை நடைபெறுகிறது. இதில், முதல் நாளான திங்கள்கிழமை தமிழ் மற்றும் இதர மொழிப் பாடங்களுக்கான தேர்வு நடைபெறுகிறது.

இந்தத் தேர்வைப் பொறுத்தவரையில் கோவை மாவட்டத்தில் உள்ள 365 அரசு, அரசு உதவிபெறும் பள்ளிகள், தனியார் பள்ளிகளைச் சேர்ந்த 19 ஆயிரத்து 344 மாணவர்கள், 16 ஆயிரத்து 368 மாணவிகள், தனித்தேர்வர்கள் 852 பேர் என மொத்தம் 36,564 பேர் எழுதுகின்றனர். இந்தத் தேர்வுக்காக 7 மையங்களில் 14 வினாத்தாள் கட்டுக் காப்பாளர்கள் மற்றும் ஆயுதம் ஏந்திய காவலர்கள்கள் பாதுகாப்புடன் வினாத்தாள் கட்டுகள் வைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தேர்வுக்காக 130 முதன்மைக் கண்காணிப்பாளர்கள், 130 துறை அலுவலர்கள், 2,100 அறைக் கண்காணிப்பாளர்கள், 300 நிலையான மற்றும் பறக்கும் படை அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இண்டியன் பேங்க் இந்தியன் வங்கி

கிளை இடமாற்றம் அறிவிப்பு

இந்தியன் வங்கி, சித்தாபுதூர் கிளை இடமாற்றம் செய்யப்பட்டு 02.03.2026 (திங்கள்கிழமை) முதல் புதிய கட்டிடத்தில் கீழ்க்கண்ட முகவரியில் செயல்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

புதிய முகவரி :

எண்.262, சின்னசாமி நாயுடு ரோடு, ஐயப்பன் கோவில் எதிரில், சித்தாபுதூர், கோயம்புத்தூர் - 641044.

கிளை மேலாளர்

IDBI BANK

ஐடிபிஐ வங்கி லிட்
எண்.72, மே ஃபிளவர் 'E' கேஸில், டாக்டர் பாலசுந்தரம் ரோடு, அவினாசி ரோடு அடுத்து, ATT காலனி, கோயம்புத்தூர்-641 018.
இணையதளம் : www.idbi.bank.in, CIN:L65190MH2004GOI148838

அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, பிணையநலன் (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 9(1) உடன் கீழ், அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான இ-ஏல விற்பனை அறிவிப்பு.

ஐடிபிஐ வங்கியின் (பாதுகாக்கப்பட்ட கடனீந்தவர்) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள், மேற்படி வங்கிக்கு வரவேண்டிய ரூ.43,74,363/- (01.02.2026 தேதி அன்று) தொகையை திரு.K.கோவிந்தராஜ் (லேட்) மற்றும் திருமதி.R.தீபா (சார்-கடன்தாரர் மற்றும் திரு.K.கோவிந்தராஜின் சட்டபூர்வ வாரிகதாரர்) என்பவர்களிடமிருந்து வசூலிக்கும் பொருட்டு, கடன் வழங்கிய வங்கிக்குப் பிணையப்படுத்தப்பட்ட/ஈடுவைக்கப்பட்ட, கொள்நிலை சுவாதீனம் (Physical Possession) செய்து கொண்ட கீழ்க்கண்ட அசையாச் சொத்தினை, 20.03.2026 தேதியில், (காலை 10.30 மணி முதல் காலை 11.30 மணி வரை) விற்பனை செய்யவுள்ளார் என்பதை குறிப்பாக கடன்தாரர்(கள்), உத்தரவாதமளித்தவர்(கள்) மற்றும் பொதுமக்களுக்கு இந்த அறிவிப்பின் மூலம் தெரியப்படுத்தப்படுகிறது. இந்த சொத்துக்கள் 'உள்ளது உள்ளபடி, உள்ளது உள்ளவாறு மற்றும் உள்ள இடத்தில் உள்ளவாறு' என்ற அடிப்படையில் விற்கப்படும். குறைந்தபட்ச நிர்ணயிக்கப்பட்ட விலை : ரூ.41,91,000/- மற்றும் முன்வைப்புத் தொகை : ரூ.4,19,100/-.

அசையாச் சொத்து விபரம்

கோயம்புத்தூர் மாவட்டம் - 641 022, கோயம்புத்தூர் வடக்கு தாலூகா, குருடம்பாளையம் கிராமம், சர்வே எண்.265/1, 267, அங்காளம்மன் லேஅவுட், மனை எண்.13ல் தென்புறப் பகுதியில் அமைந்த 800 சதுர அடி (2048 சதுர அடி கட்டுமானப் பரப்பு) விஸ்தீரண நிலமாகிய குடியிருப்புச்சொத்து திருமதி.R.தீபா பெயரில் உள்ளது.

விற்பனை குறித்த விரிவான நிபந்தனை விபரங்களுக்கு www.baanknet.com மற்றும் பாதுகாக்கப்பட்ட கடனீந்தவரின் www.idbi.bank.in இணையதளத்தில் பார்வையிடலாம்.

தேதி : 27.02.2026 ஒம்/- அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
இடம் : கோயம்புத்தூர் ஐடிபிஐ வங்கி

IDBI BANK

ஐடிபிஐ வங்கி லிட்
எண்.72, மே ஃபிளவர் 'E' கேஸில், டாக்டர் பாலசுந்தரம் ரோடு, அவினாசி ரோடு அடுத்து, ATT காலனி, கோயம்புத்தூர்-641 018.
இணையதளம் : www.idbibank.in, CIN:L65190MH2004GOI148838

அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, பிணையநலன் (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 9(1) உடன் கீழ், அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான இ-ஏல விற்பனை அறிவிப்பு.

ஐடிபிஐ வங்கியின் (பாதுகாக்கப்பட்ட கடனீந்தவர்) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள், மேற்படி வங்கிக்கு வரவேண்டிய ரூ.75,05,628.55/- (26.02.2026 தேதி அன்று) தொகையை திரு.ரமேஷ் குமார் மற்றும் திருமதி.M.மரியா அனுஷியா என்பவர்களிடமிருந்து வசூலிக்கும் பொருட்டு, கடன் வழங்கிய வங்கிக்குப் பிணையப்படுத்தப்பட்ட/ஈடுவைக்கப்பட்ட, கொள்நிலை சுவாதீனம் (Physical Possession) செய்து கொண்ட கீழ்க்கண்ட அசையாச் சொத்தினை, 20.03.2026 தேதியில் காலை 10.30 மணி முதல் காலை 11.30 மணி வரை இ-ஏலம் மூலமாக விற்பனை செய்யவுள்ளார் என்பதை குறிப்பாக கடன்தாரர்(கள்), உத்தரவாதமளித்தவர்(கள்) மற்றும் பொதுமக்களுக்கு இந்த அறிவிப்பின் மூலம் தெரியப்படுத்தப்படுகிறது. இந்த சொத்துக்கள் 'உள்ளது உள்ளபடி, உள்ளது உள்ளவாறு மற்றும் உள்ள இடத்தில் உள்ளவாறு' என்ற அடிப்படையில் விற்கப்படும். குறைந்தபட்ச நிர்ணயிக்கப்பட்ட விலை : ரூ.55,00,000/- மற்றும் முன்வைப்புத் தொகை : ரூ.5,50,000/-.

அசையாச் சொத்து விபரம்

(கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் தாலூகா, பேரூர் செட்டிபாளையம் கிராமம், மகரிஷி வேதாத்ரி நகர், க.ச.எண்.19/1ல் திரு.ரமேஷ் குமார் பெயரிலுள்ள மனை எண்.1க்குரிய 3496 சதுர அடி குடியிருப்பு மனை நிலம்).

விற்பனை குறித்த விரிவான நிபந்தனை விபரங்களுக்கு www.baanknet.com மற்றும் பாதுகாக்கப்பட்ட கடனீந்தவரின் இணையதளத்தில் பார்வையிடலாம். www.idbibank.in

தேதி : 27.02.2026 ஒம்/- அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
இடம் : கோயம்புத்தூர் ஐடிபிஐ வங்கி

IDBI BANK

ஐடிபிஐ வங்கி லிட்
எண்.72, மே ஃபிளவர் 'E' கேஸில், டாக்டர்.பாலசுந்தரம் ரோடு, அவினாசி ரோடு அடுத்து, ATT காலனி, கோயம்புத்தூர்-641 018.
இணையதளம் : www.idbi.bank.in, CIN:L65190MH2004GOI148838

அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, பிணையநலன் (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 9(1) உடன் கீழ், அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான இ-ஏல விற்பனை அறிவிப்பு.

ஐடிபிஐ வங்கியின் (பாதுகாக்கப்பட்ட கடனீந்தவர்) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள், மேற்படி வங்கிக்கு வரவேண்டிய ரூ.44,32,535/- (01.02.2026 தேதி அன்று நிலுவை) தொகையை திரு.சுதீஷ்.S.J மற்றும் திரு.சுவீஷ்.S.J, என்பவர்களிடமிருந்து வசூலிக்கும் பொருட்டு, கடன் வழங்கிய வங்கிக்குப் பிணையப்படுத்தப்பட்ட/ஈடுவைக்கப்பட்ட, கொள்நிலை சுவாதீனம் (Physical Possession) செய்து கொண்ட கீழ்க்கண்ட அசையாச் சொத்தினை, 20.03.2026 தேதியில், காலை 10.30 மணி முதல் காலை 11.30 மணி வரை இ-ஏல மூலமாக விற்பனை செய்யவுள்ளார் என்பதை குறிப்பாக கடன்தாரர்(கள்), உத்தரவாதமளித்தவர்(கள்) மற்றும் பொதுமக்களுக்கு இந்த அறிவிப்பின் மூலம் தெரியப்படுத்தப்படுகிறது. இந்த சொத்துக்கள் 'உள்ளது உள்ளபடி, உள்ளது உள்ளவாறு மற்றும் உள்ள இடத்தில் உள்ளவாறு' என்ற அடிப்படையில் விற்கப்படும். குறைந்தபட்ச நிர்ணயிக்கப்பட்ட விலை : ரூ.55,00,000/- மற்றும் முன்வைப்புத் தொகை : ரூ.5,50,000/-.

அசையாச் சொத்து விபரம்

திரு.சுதீஷ்.S.J மற்றும் திரு.சுவீஷ்.S.J ஆகியோர் பெயரில் கோயமுத்தூர் மாவட்டம் - 641401, சூலூர் தாலூகா, காடம்பாடி கிராமம், பாரி நகரில் சர்வே எண். 278/1A1ல் உள்ள மனை எண்.44ல் அமைந்துள்ள 1,120 சதுர அடி (1238 சதுர அடி கட்டுமானப்பரப்பு) விஸ்தீரண நிலமாகிய குடியிருப்புச் சொத்து.

விற்பனை குறித்த விரிவான நிபந்தனை விபரங்களுக்கு www.baanknet.com மற்றும் பாதுகாக்கப்பட்ட கடனீந்தவரின் www.idbi.bank.in இணையதளத்தில் பார்வையிடலாம்.

தேதி : 27.02.2026 ஒம்/- அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
இடம் : கோயம்புத்தூர் ஐடிபிஐ வங்கி